**செய்தி வெளியீடு எண்: 530** **நாள்: 07.09.2012**

பள்ளிக் கல்வித் துறை தொடக்கக் கல்வி இயக்கத்தின் சார்பாக கோயம்புத்தூர் மண்டலத்தைச் சார்ந்த (கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, நீலகிரி, சேலம், நாமக்கல், திண்டுக்கல், கரூர் மாவட்டக் தொடக்கக் கல்வி அலுவலர்கள் மற்றும் உதவி / கூடுதல் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் கலந்து கொள்ளும், அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கான அரசின் நலத் திட்டங்கள், தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை செயல்படுத்துதல் குறித்த ஆய்வுக் கூட்டம் இன்று (07.09.2012) கோவை PSG Technology கல்லூரி கூட்டரங்கில் மாண்புமிகு. பள்ளிக் கல்வி விளையாட்டு, இளைநர் நலத்துறை அமைச்சர் திரு. N. R. சிவபதி அவர்களின் தலைமையிலும், பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலர் திருமதி. டி. சபிதா, இ.ஆ.ப. அவர்களின் முன்னிலையிலும் நடைபெற்றது.

ஆய்வுக் கூட்டத்தின் தொடக்க நிகழ்ச்சியில் கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் வணக்கத்திற்குரிய திரு. செ. மா. வேலுசாமி அவர்களும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சேலஞ்சர் துரை, திரு. மலரவன், திரு. பொள்ளாச்சி ஜெயராமன், திரு. சின்னராஜ் மற்றும் திரு. ஆறுகுட்டி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

ஆய்வுக் கூட்டத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் திரு. தேவராஜன் அவர்களும், பள்ளிக் கல்வி துறை இணை இயக்குநர்களும், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் அவர்களும், கோவை மண்டல மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள் அவர்களும் மற்றும் உதவி / கூடுதல் தொடக்கக் கல்வி அலுவலர்கள் பங்கேற்றார்கள். தொடக்கக் கல்வி இயக்குநர் திரு. ராமேஸ்வர முருகன் அனைவரையும் வரவேற்று இந்நிகழ்ச்சி குறித்து சிறப்புரை ஆற்றினார்.

மேற்காணும் ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் அனைத்து அலுவலர்களுக்கும் கீழ்க்குறித்த அறிவுரைகள் வழங்கப்பட்டன.

1) பள்ளி மாணவர்களுக்கான அரசின் நலத் திட்டங்கள் விலையில்லை பாடப்புத்தகங்கள், பாடக்குறிப்பேடுகள், சீருடைகள், இலவசப் பேருந்து அட்டைகள் போன்ற நலத்திட்டங்களை தாமதமின்றி செயல்படுத்திட வேண்டும்.

2) குறைவான மாணவர்கள் உள்ள பள்ளிகளில் மாணவர்கள் சேர்க்கையினை அதிகப்படுத்திடவும், மாணவர்களுக்கான அரசின் நலத்திட்டங்களை பெற்றோர்களுக்கு தெரியப்படுத்திடவும் நடவடிக்கை எடுத்திட வேண்டும்.

3) ஆய்வு அலுவலர்கள் அனைவரும் அனைத்தப் பள்ளிகளையும் ஆண்பாய்வு செய்தல் வேண்டும். ஆண்டாய்வின் மூலம் பள்ளிகளில் கற்றல் கற்பித்தல் பணியை மேம்படுத்திட வேண்டும்.

4) மாணவர்கள் தூய்மையாக பள்ளிக்கு வருவதையும் பெற்றோர்களுக்கும். பெரியவர்களுக்கு மரியாதை தருவதையும் உறுதிப்படுத்திட வேண்டும்

5) பள்ளி மாணவர்களின் வாசிப்புத் திறன் குறித்து ஆய்வு செய்து அந்தந்தல் பாடங்களில் வாசிப்புத் திறன் மேம்படுத்திட வேண்டும்.

6) பள்ளி மாணவர்களுக்கான 2 ம் பருவத்திற்குரிய விலையில்லா பாடப்புத்தங்கள், நோட்டுப் புத்தங்களை காலாண்டு விடுமுறைக்குப் பின், பள்ளி. துவங்கும் நாளான அக்டோபர் 4 ஆம் நாளே மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

7) தொடர் மற்றும் முழுமையான மதிப்பீட்டு முறை (CCE) பள்ளிகளில் சிறப்பான முறையில் நடத்தப்பட வேண்டும்.

8) முப்பருவக் கல்வி (Tri-master) பள்ளிகளில் சிறப்பான முறையில் செயல்படுத்திடவும், இதன்படி பள்ளி மாணவர்களிடையே சிந்திக்கும் திறனையும், ஒழுங்கு மற்றும் கட்டுப்பாட்டினையும் வளர்த்திடவும் செய்தல் வேண்டும்.

9) குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச் சட்டத்தில் உள்ள உட்கூறுகள் அனைத்தையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் கோயம்புத்தூர், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களைச் சார்ந்த மாவட்டத்திற்கு 3 பள்ளிகள் வீதம் தேர்வு செய்யப்பட்ட கீழ்க்காணும் சிறந்த பள்ளிகளுக்கு அரசின் சுழற் கேடயம் அந்தந்தப் பள்ளி தலைமை ஆசிரியர்களிடம் மாண்புமிகு பள்ளிக் கல்வி அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் கீழ்க்காணும் பள்ளிகள் பார்வையிடப்பட்டது.

1) திருப்பூர் மாவட்டம், காரணம்பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளி.
2) உண்டு உறைவிடப் பள்ளி பல்லடம்.
3) மனவளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கான உண்டு உறைவிடப்பள்ளி, சிங்காநல்லூர்.

பள்ளிகள் பார்வையின் போது பள்ளிக் கல்வித் துறை அரசு முதன்மைச் செயலர், பள்ளி கல்வி இயக்குநர் மற்றும் கோவை முதன்மைக் கல்வி அலுவலர் உடன் இருந்தனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**